


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி


NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 334 | 4 Pages | 30.6.2025 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 334 | 4 பக்கங்கள் | 30.6.2025 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்**

**புன்மை தெரிவா ரகத்து**

**விளக்கம்:**
**கொலைத்தொழிலினராகிய மக்கள் அதன் இழிவை ஆராய்ந்தவரிடத்தில் புலைத்தொழிலுடையவராய்த் தாழ்ந்து தோன்றுவர்.**

# ஊதினால் அணைய நாம் என்ன தீக்குச்சியா? 'உதயசூரியன்' மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, ஜூன் 30

திமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது;

"ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பு என்பது திமுகவுக்கான உறுப்பினர் சேர்க்கைக்காக மட்டுமல்ல. தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க அனைவரையும் ஓரணியில் திரட்டுவதற்கான முயற்சி. ஊதினால் அணைய நாம் என்ன தீக்குச்சியா? நாம் உதயசூரியன்.

நம்மை அணைக்க நினைத்தால் நம் மண், மொழி, மானத்தை காப்பாற்ற ஒன்றாக நின்று எதிர்ப்போம். இது தான் தமிழர்களின் தனி குணம். ஓரணியில் தமிழ்நாடு



இயக்கத்தின் நோக்கமும் இது தான். வாட்ஸ் அப், எக்ஸ் தளம், பேஸ்புக், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூகவலைத்தளங்களில் 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற லோகோவை டிபி (DP) ஆக கட்டாயமாக வைக்க வேண்டும்"

இவ்வாறு அவர் பேசினார்.

## மும்பைசென்னை 'ஏர் இந்தியா' விமானத்தில் எரிந்த வாசனை அவசரமாக தரையிறக்கம்

மும்பை, ஜூன் 30

மும்பை விமான நிலையத்தில் இருந்து நேற்று இரவு 10.55 மணிக்கு சென்னை நோக்கி புறப்பட்ட 'ஏர் இந்தியா' நிறுவனத்தின் AI 639 விமானம், புறப்பட்ட சிறிது நேரத்தில் மும்பை விமான நிலையம் நோக்கி திருப்பி விடப்பட்டு அவசரமாக தரையிறக்கப்பட்டது. விமானத்தில் இருந்த பயணிகள் அனைவரும் பத்திரமாக வெளியேற்றப்பட்டனர்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கை காரணமாக விமானம் தரையிறக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகின. விமான பயணிகள் மாற்று விமானத்தில் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இந்நிலையில், இந்த சம்பவம் குறித்து 'ஏர் இந்தியா' நிறுவனத்தின் செய்தி தொடர்பாளர் அளித்துள்ள விளக்கத்தில், விமானத்திற்குள் எரிந்த வாசனை வந்ததால் விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

மும்பை விமான நிலையத்தில் தயார் நிலையில் இருந்த 'ஏர் இந்தியா' நிறுவன ஊழியர்கள், பயணிகளுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் ஏற்பாடு செய்து கொடுத்ததாகவும், பயணிகள் மற்றும் விமான ஊழியர்களின் பாதுகாப்பே தங்கள் முன்னுரிமை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## எமர்ஜென்சி காலம் இந்திய ஜனநாயகத்தின் இருண்ட அத்தியாயம் மத்திய மந்திரி கஜேந்திர செகாவத்



ஜெய்ப்பூர், ஜூன் 30

இந்தியாவில் 1975 ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் எமர்ஜென்சி அமல்படுத்தப்பட்டது. இந்நிலையில், எமர்ஜென்சி அமல்படுத்தப்பட்டு 50 ஆண்டுகள் ஆனதை நினைவுகூறும் விதமாக ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் உள்ள பா.ஜ.க. மாநில தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மத்திய மந்திரி கஜேந்திர செகாவத் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது;

"இந்தியாவில் 1975 ஆம் ஆண்டு அமல்படுத்தப்பட்ட அவசரநிலை இந்திய ஜனநாயகத்தின் இருண்ட அத்தியாயமாகும். அந்தக் காலகட்டத்தில் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி அதிகாரத்தை தக்கவைப்பதற்கான முயற்சியில் அரசியலமைப்பை நசுக்கினார்.

1971 போரில் பாகிஸ்தானை இந்தியா வென்ற பிறகு காங்கிரஸ் கட்சியில் ஆணவம் தலைதூக்கியபோது எமர்ஜென்சிக்கான விதைகள் விதைக்கப்பட்டன. அரசியல் தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர், நீதித்துறைக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது, பத்திரிகை சுதந்திரம் ஒடுக்கப்பட்டது.

எமர்ஜென்சி காலகட்டத்தில் ஜனநாயகம் மற்றும் அரசியலமைப்பின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து எதிர்கால சந்ததியினருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக நாடு முழுவதும் கருப்பு நாள் நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## மராட்டிய மாநிலத்தில் புதிதாக 6 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி



மும்பை, ஜூன் 30

கடந்த 2019ம் ஆண்டு சீனாவில் பரவ ஆரம்பித்த கொரோனா நோய், நாளடைவில் உலகம் முழுவதும் பரவி பல உயிரிழப்புகளை ஏற்படுத்தியது. இதனையடுத்து அதற்கான தடுப்பூசிகளை கண்டுபிடிப்பதில் உலக நாடுகள் கவனம் செலுத்தின. தடுப்பூசி செலுத்திய பிறகு, கொரோனா நோய்த் தொற்றின் பரவல் சற்று குறைந்தது.

2022ம் ஆண்டு வரை உச்சத்தில் இருந்து, பின்னர் படிப்படியாக நோய்த்தொற்றின் தீவிரத்தன்மையும், இறப்பு விகிதமும் குறைந்திருந்தது. இருப்பினும் வெவ்வேறு வகையில் கொரோனா வைரஸ் உருமாறி தற்போது பெரும் பாதிப்பை கொடுக்காமல் சாதாரண காய்ச்சல் என்ற நிலைக்கு மட்டுமே மாறியுள்ளதே தவிர, அது முற்றிலும் மறைந்துவிடவில்லை.

இந்நிலையில், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் கொரோனா தொற்று பாதிப்பு கண்டறியப்பட்டு வருகிறது. அந்த வகையில் மராட்டிய மாநிலத்தில் இன்று புதிதாக 6 பேருக்கு கொரோனா பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. இதன் மூலம் நடப்பாண்டில் இதுவரை மராட்டிய மாநிலத்தில் கொரோனா பாதிப்பிற்கு ஆளானவர்களின் எண்ணிக்கை 2,488 ஆக அதிகரித்துள்ளது.

இதில் மும்பையில் மட்டும் இந்த ஆண்டு 990 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனா பாதிப்பால் மராட்டிய மாநிலத்தில் கடந்த ஜனவரி 1ந்தேதி முதல் இதுவரை 37 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் 36 பேருக்கு ஏற்கனவே பிற உடல்நல பாதிப்புகள் இருந்து கண்டறியப்பட்டுள்ளதாக மாநில சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## வலங்கைமானில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 22வது மாவட்ட மாநாடு



ஜுன் 28 கோவிந்தகுடி திருமண மண்டபத்தில் தோழர் எம்.செல்வராஜ் முன்னாள் எம்.பி நினைவு அரங்கில் தோழர்கள் சிபிஐ மாவட்ட குழு உறுப்பினர் டி ரங்கராஜன், விவசாய சங்க ஒன்றிய செயலாளர் சின்ன ராஜா, மாதர் சங்க ஒன்றிய செயலாளர் தேவிகா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

கட்சி கொடியை கோயில் மனை குடியிருப்போர் சங்க மாவட்ட செயலாளர் தோழர் பி.வி.சந்திர ராமன் ஏற்றி வைத்து வாழ்த்தி பேசினார். இளைஞர் பெருமன்றம் ஒன்றிய செயலாளர் தோழர் பாக்யராஜ் வரவேற்புரையாற்றினார். சிபிஐ.ஒன்றிய துணைச் செயலாளர்,

தோழர்.கே.செல்வராஜ்அஞ்சலிதீர்மானத்தை முன்மொழிந்தார் . விவசாய தொழிலாளர் சங்க ஒன்றிய செயலாளர் ஜி.ரவி உறுதி மொழியை முன்மொழிந்தார்.

விவசாய தொழிலாளர் சங்க மாநில பொதுச் செயலாளர் தோழர் அ. பாஸ்கர் மாநாட்டை துவக்கி வைத்து பேசினார்.

தோழர் எஸ்.எம்.செந்தில்குமார் அறிக்கையை முன்மொழிந்தார்.

தோழர்கள் எஸ் கேசவராஜ் சிபிஐ மாவட்ட பொறுப்பு செயலாளர், தவபாண்டியன் சிபிஐ .மாவட்ட பொருளாளர், பாலமுருகன் இளைஞர் மன்ற மாவட்ட தலைவர் ஆகியோர் வாழ்த்தி பேசினார்கள்பாராளுமன்ற உறுப்பினர் தோழர் வை.செல்வராஜ் அவர்கள் சிபிஐ மாவட்ட செயலாளர் மற்றும் தேர்வு செய்யப்பட்ட பொறுப்பாளர்களை அறிமுகப்படுத்தியும் வாழ்த்தியும் பேசினார் .

வலங்கைமான் பகுதியின் பொறுப்பாளரும், விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் கு .ராஜா, அனைவருக்கும் பொன்னாடை அணிவித்து வாழ்த்தி பேசினார். தோழர்கள் எஸ்.எம்.செந்தில்குமார் செயலாளராகவும், கே.செல்வராஜ் துணைச் செயலாளர், பாக்யராஜ் துணைச் செயலாளராகவும், கலியமூர்த்தி பொருளாளராகவும் ஒரு மனதாக தேர்வு செய்யப்பட்டார்கள். நிகழ்ச்சி மிகச்சிறப்பாக இனிதே நிறைவு பெற்றது.


## காவிரி ஆற்றில் அடித்து வரப்பட்ட முதியவர் சடலம் யார் அவர்? போலீசார் விசாரணை



பென்னாகரம், ஜூன்.30:

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் அடித்து வரப்பட்ட அடையாளம் தெரியாத ஆண் சடலத்தை போலீசார் மீட்டனர். கடந்த சில நாட்களாக கர்நாடக அணைகளில் இருந்து காவிரி ஆற்றில் உபரி நீர் வெளியே ற்றப்பட்டு வருவதால் ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து அதிகரித்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்துக் கொட்டியும்,இரு கரைகளையும் தொட்டவாறு காவிரி நீர் ஆர்ப்பரித்து வந்து கொண்டிருந்தது. தற்போது காவிரி ஆற்றில் நீர்வரத்து விநாடிக்கு 65,000 கன அடியாக சரிந்துள்ளது. இந்த நிலையில் காவிரி ஆற்றில் ஆண் சடலம் அடித்து வரப்பட்டு பிரதான அறிவிச் செல்லும் நடைபாதையில் உள்ள தடுப்புக் கம்பிகளில் சிக்கிக் கொண்டது. இதனைக் கண்ட பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீஸார் உடலை மீட்டு,ஆற்றில் அடித்து வரப்பட்டது 55 வயது மதிப்புடைய ஆண் சடலம் என்று தெரிவித்தனர்.உடலை மீட்க போலிஸார் பிரேத பரிசோதனைக்காக பென்னாகரம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். காவிரி ஆற்றில் அடித்து வரப்பட்ட நபர் குறித்து ஒகேனக்கல் போலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## தேசிய முய்தாய் சாம்பியன்ஷிப்பில் சென்னையை சேர்ந்த ஆட்டோ ஓட்டுநரின் மகள் தங்க பதக்கம் வென்று சாதனை



ஹரியானாவின் ரோஹ் தக்கில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு சீனியர் தேசிய முய்தாய் சாம்பியன்ஷிப்பில் சென்னை, கொளத்துரை சேர்ந்த ஆட்டோ ஓட்டுநரின் மகள் கீர்த்தனா தங்கப் பதக்கம் வென்று தமிழகத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்.

ஜூன் 9 முதல் 14 வரை 6 நாட்கள் நடந்த இப்போட்டி யில் ஆந்திரா,கேரளா, மகாராஷ்டிரா உள்ளிட்ட 24 மாநிலங்கள் கலந்து கொண்டன. சீனியர் தேசிய முய்தாய் சாம்பியன்ஷிப் பிரிவில் இறுதி போட்டியில் டெல்லி வீராங்கனையை எதிர்கொண்ட கீர்த்தனா மிக எளிதாக தோற்கடித்து தங்க பதக்கத்தை வென்றார்.

மேலும் கீர்த்தனா கூறுகையில் எங்கள் வீடு கொளத்தூரில் உள்ளது எங்கள் குடும்பம் மிகவும் ஏழ்மையான குடும்பம் அப்பா ஆட்டோ ஓட்டுகிறார் அம்மா ஹவுஸ் வைஃப் ஆக இருக்கிறார்கள் எனக்கு ஸ்போர்ட்ஸ்ல அதிக ஆர்வம் இருக்கிறது நான் தமிழ்நாட்டுக்கு பெருமை சேர்க்கும் வகையில் பல போட்டிகளில் கலந்து வெற்றி பெற்று தமிழகத்திற்கு நிச் சயமாக பெருமை சேர்ப்பேன் வீட்டில் வசதி இல்லாத காரணத்தினால் தமிழக அரசு சில உதவிகளை செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் என கூறினார்....

## ரெயிலில் தவறவிட்ட நகைகள் போலீசிடம் ஒப்படைப்பு

Train no 12631 நெல்லை எக்ஸ்பிரஸில்HA119,21இருக்கையில் தாம்பரம் _ திருநெல்வேலி வரை முன் பதிவு செய்து பயணம் செய்து வந்த உதய சூரியன் வ/56 த/பெ தியாகராஜன், 4/148, தென்றல் தெரு பாரதிதாசன் நகர் மன்னார்குடி திருவாரூர் ( Dt) என்பவர் தன்னுடைய மனைவி சகிதம் பயணம் செய்து வந்தவர் மேற்படி வண்டியில் தவறவிட்ட டிராலி பேக்கும் அதனுள் இருந்த சுமார் ஐந்து சவரன் தங்க நெக்லஸ் மற்றும் சுமார் அரை சவரன் எடை கொண்ட காது மாட்டி மற்றும் சுமார் 4000 ரூபாய் மதிப்புள்ள



பட்டுப்புடவை ஆகியவை நல்ல முறையில் SSI பிரைட்மோகன் ,Gr 119 ஜேசுதாஸ், சகிதம் ஒப்படைக்கப்பட்டது என்ற விபரத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்



## கள்ளக்காதலை கைவிட்ட பெண்ணை மிரட்டியவர் கைது

சென்னை ஜூன் 30

சென்னை அடுத்த மேற்கு தாம்பரம், கல்யாண்நகர் பகுதியில் வசிக்கும் 30 வயதுடைய பெண் ஒருவர் திருமணமாகி கணவர் மற்றும் 3 குழந்தைகளுடன்வசித்து வருகிறார்.

இவர் முடிச்சூர் சாலை வெற்றிநகர் பகுதியில் வாடகை வீட்டில் குடியிருந்தபோது பக்கத்து வீட்டில் வசித்த செந்தில் (வயது 40) என்பவருடன் 10வருடங்களுக்குமுன்பு தொடர்பு ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

இது அவருடைய கணவருக்கு தெரிய வந்ததால் 4 வருடங்களுக்கு முன்பு செந்திலிடம் பேசுவதை நிறுத்திவிட்டு வீட்டை காலி செய்து கல்யாண்நகர் பகுதிக்கு வந்து விட்டார்.

இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு அந்தப் பெண் வேலை செய்யும் இடத்துக்கு நேரில் சென்ற செந்தில், தன்னிடம் மீண்டும் பழக வேண்டும் என்று கூறி அவரிடம் தகராறில் ஈடுபட்டு கொலை மிரட்டல் விடுத்ததாக கூறப்படுகிறது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட பெண் தாம்பரம் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார். இதனைத் தொடர்ந்து தாம்பரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து செந்திலை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## போக்குவரத்து நெரிசல்: போலீஸ்காரர் வாகனத்துக்கு ரூ.2,500 அபராதம் பெண் போலீசுக்கு குவியும் பாராட்டு

புதுக்கோட்டை ஜூன் 30



புதுக்கோட்டை மாநகரின் மையப்பகுதியான கீழ ராஜ வீதியில் நேற்று முன்தினம் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. வாகனங்கள் நிறுத்தக்கூடாத இடத்தில் ஒரு கார் நீண்ட நேரம் நிறுத்தப்பட்டிருந்தது.

அந்த காரின் முகப்பு பகுதியில் போலீஸ் என்ற 'ஸ்டிக்கர்' ஒட்டப்பட்டிருந்தது.

பொதுமக்கள் சத்தம் போட்டும் அந்த காரில் இருந்த டிரைவர் வாகனத்தை விட்டு இறங்காமல் இருந்ததோடு, வாகனத்தை நகர்த்தாமலும் இருந்ததாக கூறப்படுகிறது.

அந்த நேரத்தில் அங்கு பணியில் இருந்த போக்குவரத்து பெண் போலீஸ் காயத்ரி பாய் விரைந்து வந்தார். 'நோ பார்க்கிங்கில்' வாகனம் நிறுத்தியதற்கும், வாகனத்தை நகர்த்தாமல் இருந்ததற்கும் என 2 பிரிவுகளில் அந்த வாகனத்துக்கு ரூ.2,500 அபராதம் விதித்தார். அந்த காரில் போலீஸ் என்ற ஸ்டிக்கர் இருந்தபோதிலும் தனது கடமையில், கருத்தாக செயல்பட்டு பெண் போலீஸ்அபராதம்விதித்ததுடன் அந்த காரை உடனடியாக நகர்த்தவும் நடவடிக்கை எடுத்தார்.

இந்த சம்பவம் தொடர்பான வீடியோ சமூக வலைத்தளங்களில்வைரலானது. இதில் அந்த பெண் போலீசுக்கு பாராட்டுகள் குவிகிறது. சம்பந்தப்பட்ட கார், புதுக்கோட்டை அருகே ஒரு போலீஸ் நிலையத்தில் பணியாற்றும் போலீஸ்காரரின் சொந்த வாகனம் என்பது குறிப்பிடத்தக்கது.

## நெல்லையப்பர் கோவிலில் வேட்டி அணிந்து சாமி தரிசனம் செய்த வெளிநாட்டினர்



நெல்லை, ஜூன் 30

நெல்லை டவுன் நெல்லையப்பர் காந்திமதி அம்பாள் கோவில் ஆனி பெருந்திருவிழா தேரோட்டம் வருகிற 8ந் தேதி நடைபெறுகிறது. புகழ் பெற்ற இந்த கோவிலில் தினமும் பல்வேறு மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளை சேர்ந்தவர்கள் வந்து தரிசனம் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் வியட்நாம் நாட்டைச் சேர்ந்தவர்கள் நேற்று நெல்லையப்பர் கோவிலுக்கு சாமி தரிசனம் செய்ய வந்தனர். அப்போது அவர்கள் தமிழர்களின் பாரம்பரிய உடைகளில் ஒன்றான வேட்டி அணிந்து வந்து சாமி தரிசனம் செய்தனர். பின்னர் கோவிலின் அனைத்து பகுதிகளையும் சுற்றிப்பார்த்தனர்.

பின்னர், அவர்கள் கூறுகையில், நெல்லையப்பர் கோவிலில் சிற்பங்கள் அனைத்தும் எங்களை கவர்ந்து உள்ளது. சிவனை வழிபட்டுள்ளதால் எங்களுடைய மனது நிம்மதி அடைந்து உள்ளது என்று தெரிவித்தனர்.

## ரூ.60 லட்சம் மதிப்புள்ள பீடி இலை பண்டல்கள் பறிமுதல்

தூத்துக்குடி ஜூன் 30



தூத்துக்குடி மாவட்ட கடலோர பகுதிகள் வழியாக இலங்கைக்கு சட்டவிரோதமாக பொருட்கள் கடத்தப்படும் சம்பவங்களைத் தடுக்கும் விதமாக போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் தூத்துக்குடி துறைமுகம் அருகேதிரேஸ்புரம் கடற்கரை வழியாக மர்ம நபர்கள் படகு மூலம் பீடி இலை பண்டல்களை கடத்தி வருவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

அதன்பேரில் கடலோர பாதுகாப்பு குழும போலீஸ் இன்ஸ்பெக்டர் பேச்சிமுத்து மேற்பார்வையில், போலீசார் நேற்று முன்தினம் இரவு திரேஸ்புரம் கடற்கரைக்கு விரைந்து சென்றனர். போலீசார் வருவதைக் கண்டதும் அங்கிருந்தவர்கள் கடலில் படகுடன் பீடி இலை பண்டல்களை விட்டுவிட்டு தப்பி சென்றனர்.

இதனைத் தொடர்ந்து படகு மற்றும் அதில் இருந்த ரூ.60 லட்சம் மதிப்பிலான 43 பண்டல்களில் இருந்த 1,800 கிலோ பீடி இலைகளை போலீசார் பறிமுதல் செய்து, அவற்றை சுங்கத்துறையில் ஒப்படைத்து, இச்சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் குறித்து தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

## நெல்லையில் போதை பழக்கத்திற்கு எதிராக விழிப்புணர்வு பேரணி

திருநெல்வேலி ஜூன் 30



திருநெல்வேலி மாநகர போலீஸ் கமிஷனர் அறிவுறுத்தலின்படி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நேற்று, மாநகர காவல் அதிகாரிகள் மற்றும் காவலர்கள் ஒன்றிணைந்து போதைப் பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு பேரணியை நடத்தினர். இந்த பேரணியை நெல்லை மாநகர போலீஸ் துணை கமிஷனர்கள் பிரசண்ணகுமார் (மேற்கு) மற்றும் விஜயகுமார் (தலைமையிடம்) ஆகியோர் துவக்கி வைத்தார்கள்.

இந்த விழிப்புணர்வு பேரணியில் போலீஸ் உதவி கமிஷனர்கள், போலீஸ் இன்ஸ்பெக்டர்கள், சப்இன்ஸ்பெக்டர்கள் மற்றும் காவலர்கள் உள்ளிட்ட 250 பேர் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொண்டவர்கள் போதை பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டு, விழிப்புணர்வு பதாகைகளுடன் பாளையங்கோட்டை ஆயுதப்படை மைதானத்திலிருந்து பாளையங்கோட்டை பேருந்து நிலையம், மாவட்ட நூலகம் வழியாக மீண்டும் ஆயுதப் படை மைதானத்திற்கு சென்று பேரணியை நிறைவு செய்தனர்.

## மானூரில் 23 கிலோ புகையிலை பொருட்கள் பறிமுதல்: பெண் கைது

திருநெல்வேலி ஜூன் 30




திருநெல்வேலி மாவட்டம், மானூர் பகுதியில் சப்இன்ஸ்பெக்டர் சஜீவ் தலைமையிலான போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அழகியபாண்டியபுரம், சுப்பையாபுரம் அருகே சந்தேகப்படும்படி நின்று கொண்டிருந்த சுப்பையாபுரத்தை சேர்ந்த கண்ணன் மனைவி ராசாத்தி (வயது 35) என்பவரை போலீசார் சோதனை செய்தனர். அப்போது அவர் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை விற்பனை செய்வதற்காக வைத்திருந்தது தெரியவந்தது.

இதனையடுத்து மேற்சொன்ன சப்இன்ஸ்பெக்டர், ராசாத்தியை கைது செய்தார். மேலும் அவரிடம் இருந்து 23 கிலோ புகையிலை பொருட்களை பறிமுதல் செய்து நடவடிக்கை எடுத்தார்.

## தமிழ்நாட்டில் நிரந்தரமாக மூடப்படும் 14 துணை சிறைகள்

சென்னை, ஜூன் 30



தமிழ்நாட்டில் பல்வேறு காரணங்களால் பல ஆண்டுகளாக மூடப்பட்டுள்ள 9 துணை சிறைகள் உள்பட 19 துணை சிறைகளை நிரந்தரமாக மூடி அதனை வருவாய்த் துறையிடம் ஒப்படைக்க சிறைத்துறை டி.ஜி.பி. முன்மொழிந்து இருந்தார்.

அதன்படி, செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம், திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி, கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம், கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டை, நாமக்கல் மாவட்டம் ராசிபுரம், பரமத்திவேலூர், திருச்சி மாவட்டம் மணப்பாறை, முசிறி, புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர், ராமநாதபுரம் மாவட்டம் திருவாடனை, தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை, விருதுநகர் மாவட்டம் சாத்தூர், தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் ஆகிய இடங்களில் உள்ள 14 துணை சிறைச்சாலைகளை நிரந்தரமாக மூட அரசு முடிவு செய்தது.

இதற்கான அரசாணையை உள்துறை கூடுதல் தலைமை செயலாளர் தீரஜ்குமார் வெளியிட்டுள்ளார். நிரந்தரமாக மூடப்பட்ட இந்த சிறைகள் இருக்கும் நிலம் மற்றும் கட்டிடங்கள் வருவாய்த் துறையிடம் ஒப்படைக்கப்படுகிறது.

## வள்ளியூரில் கஞ்சா விற்ற வாலிபர் குண்டர் சட்டத்தில் கைது

திருநெல்வேலி ஜூன் 30

திருநெல்வேலி மாவட்டம், தெற்கு கள்ளிகுளத்தைச் சேர்ந்த நாகராஜ் மகன் பூதலிங்கம் (வயது 31) சட்டவிரோதமாக கஞ்சா விற்பனை செய்ய வைத்திருந்த வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அவர் மீது வள்ளியூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் நவீன் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட எஸ்.பி.யிடம் வேண்டுகோள் விடுத்தார். அதன்பேரில் எஸ்.பி. சிலம்பரசன் பரிந்துரையின்படி, மாவட்ட கலெக்டர் சுகுமார் உத்தரவின்பேரில், பூதலிங்கம் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் நேற்று பாளை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

## தூத்துக்குடியில் மனைவியை கொடுமைபடுத்திய கணவனுக்கு 3 ஆண்டுகள் சிறை



தூத்துக்குடி ஜூன் 30

தூத்துக்குடி மாவட்டம், புதுக்கோட்டை, நடுகூட்டுடன்காடு பகுதியைச் சேர்ந்த சுப்பையா மகன் சிவா (வயது 34) கடந்த 2014ம் ஆண்டு தனது மனைவியை கொடுமைப்படுத்திய வழக்கில் புதுக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் சிவாவை கைது செய்தனர்.

இவ்வழக்கின் விசாரணை தூத்துக்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்3ல் நடைபெற்று வந்தது. இவ்வழக்கை விசாரித்த நீதிபதி விஜய் ராஜ்குமார் இன்று குற்றவாளி சிவாவுக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை, ரூ.500 அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

இவ்வழக்கை சிறப்பாக புலனாய்வு செய்த அப்போதைய புதுக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் சாந்தகுமாரி, குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தர நீதிமன்றத்தில் திறம்பட வாதிட்ட உதவி அரசு தரப்பு வழக்கறிஞர் கண்ணன், விசாரணைக்கு உதவியாக இருந்த முதல் நிலை காவலர் ஆனந்த ஜோதி ஆகியோரை மாவட்ட எஸ்.பி. பாராட்டினார்.

## திருநெல்வேலியில் ஜல்லி கற்கள் திருடியவர் கைது: லாரி பறிமுதல்




திருநெல்வேலி ஜூன் 30

திருநெல்வேலி மாவட்டம், முன்னீர்பள்ளம் பகுதியில் சப்இன்ஸ்பெக்டர் எட்வின் அருள்ராஜ் தலைமையிலான காவல் துறையினர் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது செங்குளம் ரயில்வே கேட் அருகே சந்தேகப்படும்படி, மினி லாரியில் வந்த கடம்போடுவாழ்வு, சுப்பிரமணியபுரம், மெயின் ரோடு பகுதியை சேர்ந்த வேல்முருகன் (வயது 54) என்பவரை நிறுத்தி போலீசார் சோதனை செய்தனர். அதில் உரிய அனுமதி சீட்டு இல்லாமல் சட்டவிரோதமாக ஜல்லி கற்களை ஏற்றி வந்தது தெரியவந்தது.

இதனையடுத்து மேற்சொன்ன சப்இன்ஸ்பெக்டர் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு, உரிய அனுமதியில்லாமல் ஜல்லி கற்களை ஏற்றி வந்த வேல்முருகனை இன்று கைது செய்தார். மேலும் அவரிடமிருந்து 1½ யூனிட் ஜல்லி கற்களையும், ஒரு மினி லாரியையும் பறிமுதல் செய்து நடவடிக்கை எடுத்தார்.

## செல்போன் பேசியபடி அரசு பஸ் ஓட்டிய டிரைவர்

திருப்பூர், ஜூன் 30



தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் உடுமலை கிளையிலிருந்து சுற்றுப்புற கிராமங்களுக்கு அரசு பஸ்கள் இயக்கப்பட்டு வருகிறது. இதன் மூலமாக பல்வேறு தரப்பினர் அன்றாட அத்தியாவசிய தேவையை நாள்தோறும் பூர்த்தி செய்து வருகின்றனர்.

இந்த சூழலில் பயணிகளின் பாதுகாப்பிற்கு அச்சாணியாக விளங்குகின்ற அரசு பஸ் டிரைவர் செல்போன் பேசியபடி அஜாக்கிரதையாக பஸ் ஓட்டி சென்ற சம்பவம் உடுமலை பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. வழித்தடம் 4 எண் கொண்ட அரசு பஸ் டிரைவர் ஒரு கையில் செல்போன் பேசிக்கொண்டு மற்றொரு கையில் பஸ்சை இயக்கி உள்ளார்.

இதனை பஸ்சில் பயண செய்த பயணி ஒருவர் வீடியோ எடுத்து சமூக வலைதளங்களில் பதிவிட்டுள்ளார். தற்போது அந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. மேலும் இந்த சம்பவத்தை முன் உதாரணமாகக் கொண்டு அரசு பஸ் டிரைவர் மற்றும் கண்டக்டர்கள் பணி நேரத்தில் செல்போன் பயன்படுத்துவதற்கு நிரந்தர தடை விதிக்க வேண்டும் என்றும் அத்துடன் செல்போன் பேசியபடி பஸ்சை ஓட்டி சென்ற டிரைவர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுப்பதற்கும் அதிகாரிகள் முன் வர வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஓட்டலில் சாப்பிட்டதை தாய் கண்டித்ததால் 8ம் வகுப்பு மாணவன் தூக்குப்போட்டு தற்கொலை

தேனி ஜூன் 30

தேனி மாவட்டம், கடமலைக்குண்டு அருகே உள்ள குமணன்தொழு கிராமத்தைச் சேர்ந்தவர் குமார். லாரி டிரைவர். இவரது மனைவி மகாலட்சுமி. இந்த தம்பதியின் மகன் திலீப்குமார் (13 வயது). நாகலாபுரத்தில் உள்ள தனியார் பள்ளியில் 8ம் வகுப்புபடித்து வந்தான். சம்பவத்தன்று இரவு டியூசன் முடிந்து திலீப்குமார் வீட்டுக்கு வந்தான். அப்போது குமார் வேலைக்கு சென்றுவிட்டதால் மகாலட்சுமி மட்டும் வீட்டில் தனியாக இருந்தார்.

மகாலட்சுமியிடம் பிரைடு ரைஸ் சாப்பிட வேண்டும் என்று திலீப்குமார் கேட்டான். இதைத் தொடர்ந்து அவர் தனது மகனுக்கு பணம் கொடுத்து அனுப்பி வைத்தார். பின்னர் ஓட்டலில் சாப்பிட்டுவிட்டு இரவு 9 மணி அளவில் மீண்டும் திலீப்குமார் வீட்டுக்கு வந்தான். அப்போது எதற்காக வீட்டில் சாப்பிடாமல் தினமும் வெளியில் சென்று சாப்பிடுகிறாய் என்று திலீப்குமாரை, மகாலட்சுமி கண்டித்ததாக கூறப்படுகிறது.

இதனால் கவலை அடைந்த திலீப்குமார் தனது அறையில் தூக்குப்போட்டு தற்கொலை கொண்டான். இதனைக் கண்டு அதிர்ச்சியடைந்த மகாலட்சுமி கதறி அழுதார்.

இதுகுறித்து தகவல் அறிந்த மயிலாடும்பாறை போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து, சிறுவனின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## போக்சோ வழக்கு குற்றவாளிகள் 2 பேர் குண்டர் சட்டத்தில் கைது

திருநெல்வேலி ஜூன் 30

திருநெல்வேலி மாவட்டம், பாறைகுளத்தைச் சேர்ந்த சுடலைக்கண்ணு மகன் பாலமுருகன் (வயது 33) மற்றும் விக்கிரமசிங்கபுரம், சிவந்திபுரம் கஸ்பாவை சேர்ந்த சுடலைமுத்து மகன் செல்வராஜ்(73) ஆகிய2பேரும்போக்சோ வழக்கில் குற்றவாளிகள் ஆவர். இவர்கள் 2 பேர் மீதும் ஊரக அனைத்து மகளிர் போலீஸ் இன்ஸ்பெக்டர் மாரியம்மாள், அம்பாசமுத்திரம் மகளிர் போலீஸ் இன்ஸ்பெக்டர் வனிதா ஆகியோர் தமிழ்நாடு குண்டர் தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட எஸ்.பி.யிடம் வேண்டுகோள் விடுத்தனர். அதன் பேரில், மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் பரிந்துரையின்படி, மாவட்ட கலெக்டர் சுகுமார் உத்தரவின் பேரில் இன்று பாலமுருகன், செல்வராஜ் ஆகிய 2 பேரும் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் பாளை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

# நெல்லை: டீக்கடைகளில் பால் பாக்கெட் திருடிச்செல்லும் மர்ம நபர் சமூகவலைதளங்களில் வீடியோ வைரல்



திருநெல்வேலி ஜூன் 30

நெல்லை மாநகர பகுதிகளில் உள்ள டீக்கடை, பழக்கடைகளில் அதிகாலையில் கடைகள் திறப்பதற்கு முன்பாகவே பால் பாக்கெட்டுகளை மொத்தமாக வினியோகஸ்தர்கள் கடை முன்பு வைத்துவிட்டு செல்வது வழக்கம். தற்போது டீக்கடைகளை குறி வைத்து அதிகாலையில் வைத்து செல்லப்படும் பால் பாக்கெட்டுகளை மர்ம நபர் ஒருவர் திருடிச் செல்லும் சம்பவம் நிகழ்ந்து வருகிறது.

கடந்த 3 நாட்களுக்கு முன்பு சந்திப்பு பகுதியில் உள்ள ஒரு டீக்கடையில் அதிகாலையில் பால்பாக்கெட்டுகள் வைத்து செல்லப்பட்டவுடன், அதை நோட்டமிட்ட மர்ம நபர் ஒருவர் அவற்றை தனது மொபட்டில் திருடிச்சென்றுள்ளார். அப்போது அந்த பகுதியில் வந்த ஒருவர் சத்தம் போடவே, அந்த மர்ம நபர் பால் பாக்கெட்டுகளை அங்கேயே போட்டுவிட்டு, தான் கொண்டு வந்த மொபட்டையும் போட்டு விட்டு தப்பியோடினார்.

அதே மர்ம நபர் வண்ணார்பேட்டையில் இருந்து முருகன்குறிச்சி நோக்கி செல்லும் திருவனந்தபுரம் சாலையில் மற்றொரு மொபட்டில் வந்துள்ளார்.

அங்குள்ள ஒரு டீக்கடையின் முன்பு மொபட்டை நிறுத்திய அந்த நபர், அங்கு வைக்கப்பட்டிருந்த சுமார் 30 லிட்டர் பால் பாக்கெட்டுகளை திருடிச் சென்றார். இதுதொடர்பான காட்சிகள்

அங்கு பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவாகியுள்ளது. இந்த காட்சிகள் தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இந்த சம்பவத்திற்கு பயன்படுத்தப்படும் இருசக்கர வாகனம் திருட்டு வாகனமாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இந்த திருட்டு சம்பவத்தில் ஈடுபடும் மர்மநபரை போலீசார் உடனடியாக பிடிக்க வேண்டும் என்று டீக்கடைக்காரர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

# பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்தது எடப்பாடி பழனிசாமிக்கு தேவையற்ற சுமை சீமான் பேட்டி



தமிழ்நாட்டை யார் ஆள்வது என்பதில் பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்தது எடப்பாடி பழனிசாமிக்கு தேவையற்ற சுமை என்று சீமான் கூறியுள்ளார். நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் காரைக்குடியில் இன்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணியை பற்றி சிந்திக்க எனக்கு நேரமில்லை. அவர்கள் முடிவெடுத்து சேர்ந்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் எடப்பாடி பழனிசாமி இந்தியாவை யார் ஆள்வது என்பதில் பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்திருந்தால் அது அவருக்கு பலனை தந்திருக்கும். தமிழ்நாட்டை யார் ஆள்வது என்பதில் பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்தது அவருக்கு தேவையற்ற சுமை.

இந்தியாவை யார் ஆள்வது என்பதில் பா.ஜ.க.வுடன் இந்த அணிகளெல்லாம் இருந்திருந்தால், 15 எம்.பி.க்கள், மத்தியில் 2 மந்திரிகள் என இருந்திருக்க வாய்ப்பிருக்கிறது. அந்த இடத்தில் கணிப்பு தவறாக போய்விட்டது என்று நான் பார்க்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

# திருப்பூரில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 5 நைஜீரியர்கள் கைது

திருப்பூர், ஜூன் 30

திருப்பூரில் சட்டவிரோதமாக சிலர் தங்கியிருப்பதாக போலீசார் ரகசிய தகவல் கிடைத்தது. இதனையடுத்து தகவலறிந்த போலீசார் குழு சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

அப்போது நீலிப்பிரிவு பகுதியில் போலீசார் நடத்திய சோதனையில்



சட்ட விரோதமாக தங்கியிருந்த 5 பேரை பிடித்தனர்.

அவர்களிடன் போலீசார் நடத்தி விசாரணையில் அவர்கள் நைஜீரியாவை சேர்ந்தவர்கள் எனவும் விசா காலம் முடிந்த பின்பும் திருப்பூரில் முறைகேடாக தங்கியிருந்து பனியன் கொள்முதல் செய்து நைஜீரியாவுக்கு ஏற்றுமதி செய்துவந்ததாகவும் தெரியவந்தது. இதனையடுத்து சட்டவிரோதமாகதங்கியிருந்தசிகேசி, சின் வேபாலினஸ், ஆண்ட்ரூ உகோச்சுக்வு, வின்சென்ட், அந்தோணி ஆகிய 5 பேரையும் போலீசார் கைது செய்தனர்.

# பயிற்சி பெண் டாக்டர்களும் பிரசவ விடுமுறையை பெற தகுதியானவர்கள்: மதுரை ஐகோர்ட்டு உத்தரவு



மதுரை, ஜூன் 30

கடலூர் மாவட்டம் திட்டக்குடி பகுதியை சேர்ந்த கிருத்திகா, மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவில் கூறியிருந்ததாவது: தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரியில் முதுகலை பொது அறுவை சிகிச்சை பட்டப்படிப்பில்சேர்ந்தேன். அப்போது என்னுடைய எம்.பி.பி.எஸ். கல்விச் சான்றிதழ் உள்ளிட்ட அசல் சான்றிதழ்களை கல்லூரி நிர்வாகத்திடம் ஒப்படைத்தேன்.

அதை பெற்றுக் கொண்ட நிர்வாகம், படிப்பு முடிந்த பின்பு அரசு மருத்துவமனையில் 2 ஆண்டு பயிற்சி டாக்டராக பணியாற்ற வேண்டும். அதன்பின்பு தான் அசல் சான்றிதழ்களை தங்களிடம் ஒப்படைப்போம் என்ற ஒப்பந்தத்துக்கு சம்மதித்தேன். அதன்படி முதுகலை பட்டப்படிப்பை முடித்தேன். பின்னர் திட்டக்குடி அரசு மருத்துவமனையில் உதவி அறுவை சிகிச்சை நிபுணராக பணியில்5.9.2019அன்று நியமிக்கப்பட்டேன். அந்த நேரத்தில் எனக்கு குழந்தையும் பிறந்தது. இதனால் பிரசவ கால விடுமுறையில் இருந்தேன்.

பின்னர் 26.11.2021 அன்று பண்ருட்டி அரசு மருத்துவமனையில் பணியில் சேர்ந்தேன். இதையடுத்து என் அசல் கல்விச்சான்றிதழ்களை திருப்பி கொடுக்கும்படி தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரியில் கேட்டேன். அவர்கள் நிராகரித்தனர். என் கல்விச்சான்றிதழ்களை வழங்க உத்தரவிட வேண்டும் என ஐகோர்ட்டு மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்தேன்.

அதனை விசாரித்த ஐகோர்ட்டு, தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரியில் போடப்பட்ட ஒப்பந்தத்தின்படிபடிப்பைமுடித்த பின்பு திட்டக்குடி மருத்துவமனையில் 12 மாதங்கள்மட்டுமே பணியாற்றி உள்ளீர்கள். மேலும் 12 மாதம் பணியாற்றிவிட்டு அசல் கல்விச்சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளலாம் என தனி நீதிபதி உத்தரவிட்டார். இது ஏற்புடையதல்ல. எனக்கு கல்விச்சான்றிதழ்களை வழங்கஉத்தரவிடவேண்டும் என கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், ராஜசேகர் ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. விசாரணை முடிவில் நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு வருமாறு:

மனுதாரர் முதுகலை பட்டப்படிப்பை முடித்த பின்பு, 2 ஆண்டுகள் பயிற்சி டாக்டராக பணியாற்ற வேண்டும் என்ற ஒப்பந்தத்தின்படி திட்டக்குடி அரசு மருத்துவமனையில் உதவி அறுவை சிகிச்சை டாக்டராக நியமிக்கப்பட்டு உள்ளார். அங்கு 12 மாதம் பணியாற்றி இருக்கிறார். பின்னர் பிரசவத்துக்காக விடுமுறையில் 12 மாதம் இருந்து உள்ளார்.

அரசு பெண் ஊழியர்களுக்கு பிரசவ கால விடுமுறையாக 12 மாதம் அனுமதிக்கப்படுகிறது.

அந்த வகையில் மனுதாரரும் அரசு ஊழியர்களை போல 12 மாத பிரசவ விடுமுறையை பெற தகுதியானவர்தான். அவரது பிரசவ விடுமுறை நாட்களை பணிக்காலமாக கருத வேண்டும். எனவே மனுதாரர் மேலும் 12 மாதம் பயிற்சி டாக்டராக பணியாற்ற வேண்டும் என்ற தனி நீதிபதி உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. அவரது அசல் கல்விச்சான்றிதழ்களை 4 வாரத்தில் வழங்க வேண்டும். இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# மாஸ்டர்ஸ் கோப்பை செஸ் தொடர்: சாம்பியன் பட்டம் வென்ற பிரக்ஞானந்தாவுக்கு மு.க.ஸ்டாலின் வாழ்த்து

உஸ்பெகிஸ்தானின் தாஷ்கென்ட் நகரில் மாஸ்டர்ஸ் கோப்பை செஸ் தொடர் நடைபெற்றது. இந்தியாவின் அர்ஜுன் எரிகைசி, பிரக்ஞானந்தா, அரவிந்த் சிதம்பரம் உட்பட உலகின் 10 முன்னணி வீரர்கள் பங்கேற்றனர். இந்த தொடரில் 10 சுற்றுகளின் முடிவில் மூன்று வீரர்கள் 5.5 புள்ளிகளை பெற்றதால் சாம்பியனை தீர்மானிக்க டைபிரேக்கர் ஆட்டம் நடத்தப்பட்டது. 2 சுற்றுகளாக நடைபெற்ற டைபிரேக்கரில் 1.5 புள்ளிகளை பெற்று பிரக்ஞானந்தா சாம்பியன் பட்டம் வென்று அசத்தினார். அவருக்கு பாராட்டுகள் குவிந்து வருகிறது. சாம்பியன் பட்டம் வென்ற பிரக்ஞானந்தாவிற்கு 17லட்சம் பரிசுத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் இந்திய செஸ் வீரர்கள் தரவரிசையில் முதலிடம் பிடித்துள்ளதோடு, சர்வதேச செஸ் தரவரிசையில் 5வது இடத்தில் உள்ள குகேஷை பின்னுக்கு தள்ளி 4வது இடத்திற்கு பிரக்ஞானந்தா முன்னேறியுள்ளார். இந்நிலையில், செஸ் வீரர் பிரக்ஞானந்தாவிற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவரது எக்ஸ் தள பக்கத்தில், " UzChess Cup Masters 2025 ஐ வென்று, இந்தியாவின் முதல் தரவரிசையில் கிளாசிக்கல் வீரராகவும், சர்வதேச செஸ் தரவரிசையில் நம்பர் 4 வீரராகவும் உயர்ந்ததற்கு பிரக்யானந்தாவுக்கு வாழ்த்துகள். பார்மில் ஒரு சாம்பியன், செக்மேட்ப்ரூப் கைகளில் ஒரு எதிர்காலம்" என குறிப்பிட்டுள்ளார்.

# தடையை மீறி உணவகங்களில் மயோனைஸ்? உணவு பாதுகாப்புத்துறை எடுத்த முடிவு

சென்னை, ஜூன் 30

தமிழகத்தில் உள்ள அசைவ உணவகங்களில், முட்டையின் வெள்ளைக் கருவை பயன்படுத்தி 'மயோனைஸ்' தயாரிக்கப்படுகிறது.

ஷவர்மா மற்றும் பர்கர் போன்ற உணவுப் பொருட்களில் 'மயோனைஸ்' அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது.

இந்நிலையில், 'மயோனைஸ்'க்கு ஓராண்டு தடை விதித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. அதில், உடலுக்கு தீங்கு விளைவிக்கும் பாக்டீரியாக்கள் இருப்பதால் தடை விதிப்பதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், மயோனைஸுக்கு ஓராண்டு தடை விதிக்கப்பட்டாலும் ஒருசில இடங்களில் இன்னும் மயோனைஸ்பயன்படுத்தப்பட்டுவருவதாகதெரிகிறது. இதனை தடுக்க உணவு பாதுகாப்புத்துறை சார்பில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் தடையை மீறி மயோனைஸ் பயன்படுத்தும் கடையின் உரிமத்தை ரத்து செய்து அபராதம் விதிக்க உணவு பாதுகாப்புத்துறை முடிவு செய்துள்ளது.

# கட்டிடத்தில் இருந்து தவறி விழுந்த பெயிண்டர் சாவு

தூத்துக்குடி ஜூன் 30

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அருகே இலுப்பையூரணி தாமஸ்நகர் கைவண்டி தொழிலாளர் காலனியைச்சேர்ந்தசெல்லையா மகன் செண்பகராஜ் (வயது 52). பெயிண்டரான இவர், கோவில்பட்டி பிரதான சாலையில் உள்ள கடையின் மாடியில் வேலை செய்து கொண்டிருந்தபோது எதிர்பாராமல் கீழே தவறி விழுந்ததில் பலத்த காயமடைந்தார்.

இதனையடுத்து அவருக்கு கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளித்து, தீவிர சிகிச்சைக்காக தூத்



துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர், அவர் ஏற்கெனவே இறந்துவிட்டதாக தெரிவித்துள்ளார். இதுகுறித்து கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

# குடிப்பழக்கத்தை கைவிட சொல்லி காதலி பேச மறுத்ததால் வாலிபர் தூக்குப்போட்டு தற்கொலை



நீலகிரி ஜூன் 30

நீலகிரி மாவட்டம் குன்னூரை அடுத்த கொலக்கம்பை அருகே கீழ் பாரதி நகரை சேர்ந்தவர் பாண்டியன். இவருடைய மனைவி சகீதா. இவர்களது மகன் ராகுல் (25 வயது). லாரி டிரைவர். இவருக்கும், கோவையில் உள்ள ஒரு நர்சிங் கல்லூரியில் படிக்கும் இளம்பெண்ணுக்கும் பழக்கம் ஏற்பட்டது. இந்த பழக்கம் நாளடைவில் காதலாக மாறியது.

அவர்கள் தங்களது செல்போன் எண்களை பரிமாறி கொண்டு தினமும் பேசி காதலை வளர்த்து வந்தனர். அதே நேரத்தில் ராகுல், மது குடிக்கும் பழக்கம் கொண்டவர். இதை அறிந்த இளம்பெண், மது குடிக்கும் பழக்கத்தை கைவிடுமாறு ராகுலிடம் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். ஆனாலும் அவர் கேட்காமல் மது குடித்து வந்தார்.

சம்பவத்தன்று ராகுல் மீண்டும் மது குடித்தார். தொடர்ந்து அவர் தனது காதலியிடம் பேச செல்போனில் தொடர்பு கொண்டார். ஆனால் ராகுல் குடிபோதையில் இருப்பதை அறிந்து கொண்ட அவரது காதலி பேச மறுத்து செல்போன் இணைப்பை துண்டித்துவிட்டார்.

உடனே ராகுல், அவரது தோழிகளைதொடர்பு கொண்டு காதலியை தன்னிடம் பேச அறிவுறுத்துமாறு கூறினார். ஆனாலும் அவரது காதலி, மது குடிக்கும் பழக்கத்தை கைவிடாவிட்டால் எப்போதும் அவரிடம் பேச மாட்டேன் என கண்டிப்புடன் கூறி பேச மறுத்துவிட்டதாக தெரிகிறது. இதனால் மனமுடைந்த ராகுல் வீட்டில் யாரும் இல்லாதபோது தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இதுகுறித்து கொலக்கம்பை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# உருது பாட ஆசிரியர் நியமன வழக்கு: தமிழக அரசுக்கு ரூ.1 லட்சம் அபராதம் ஐகோர்ட்டு உத்தரவு



சென்னை ஜூன் 30

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள மதரஸாஇ அசாம் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் 'உருது' பாட ஆசிரியர் பணியிடம் காலியாக இருந்தது.

இந்த பணியிடத்துக்கு ஹாஜிரா என்பவர், 2022ம் ஆண்டு நியமிக்கப்பட்டார். அவரது நியமனத்துக்கு ஒப்புதல் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் அரசுக்கு பள்ளி நிர்வாகம் சார்பில் விண்ணப்பிக்கப்பட்டது.

ஆனால் ஆசிரியர்தகுதி தேர்வை எழுதவில்லை எனக் கூறி, ஹாஜிரா நியமனத்துக்கு ஒப்புதல் வழங்க மறுத்து 2023ம் ஆண்டு மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் உத்தரவிட்டார். இந்த உத்தரவை ரத்து செய்ய கோரி பள்ளி நிர்வாகம் தாக்கல் செய்த வழக்கை விசாரித்த ஐகோர்ட்டு, ஆசிரியர் தகுதித் தேர்வு சிறுபான்மை கல்வி நிறுவனங்களுக்கு பொருந்தாது எனக் கூறி,

ஹாஜிராவின் நியமனத்துக்கு ஒப்புதல் வழங்கும்படி, கடந்த ஆண்டு மார்ச் மாதம் உத்தரவிட்டது. இந்த உத்தரவை எதிர்த்து, தொடக்ககல்வி இயக்குனர் உள்ளிட்டோர் சார்பில் ஐகோர்ட்டில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மேல்முறையீட்டு மனு நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், கே.சுரேந்தர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், ஆசிரியர் தகுதித் தேர்வு சிறுபான்மை கல்வி நிறுவனங்களுக்கு பொருந்தாது என ஐகோர்ட்டு ஏற்கெனவே இரண்டு உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. இந்நிலையில், தற்போது இந்த வழக்கில் தமிழக அரசு மேல்முறையீடு செய்துள்ளது எனக் கூறி, வழக்கை ஒரு லட்சம் ரூபாய் அபராதத்துடன் தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

மேலும் இந்த அபராதத் தொகையை 4 வாரங்களுக்குள் பள்ளிக்கு வழங்க வேண்டும் என்றும், இந்த தொகையை ஹாஜிரா நியமனத்துக்கு ஒப்புதல் வழங்க மறுத்த அதிகாரியிடம் வசூலித்துக் கொள்ளலாம் என்றும் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

# வேலை வாங்கிக்கொடுப்பதாக அழைத்துச்சென்று சிறுமியை கர்ப்பமாக்கிய வாலிபருக்கு சிறை



திருப்பூர், ஜூன் 30

திருப்பூர் மாவட்டம் காங்கயத்தை சேர்ந்த 17 வயது சிறுமி, கடந்த 2022ம் ஆண்டு வீட்டில் இருந்து திடீரென மாயமானார். சிறுமியின் பெற்றோர் காங்கயம் போலீசில் புகார் அளித்தனர்.

போலீசார் விசாரணை நடத்திய நிலையில் அந்த சிறுமி சென்னையில் இருப்பது தெரியவந்தது. அங்கு சென்று போலீசார் சிறுமியை மீட்டனர்.

விசாரணையில் சிறுமி வீட்டில் கோபித்துக் கொண்டு வேலை தேடி சென்னை சென்றபோது, முகலிவாக்கத்தை சேர்ந்த விஷ்ணு (28) என்பவருடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது.

சிறுமிக்கு வேலை வாங்கிக்கொடுப்பதாககூறிஅழைத்துச்சென்று ஓட்டலில் அறை எடுத்து தங்கி சிறுமியை விஷ்ணு பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். மேலும் திருமணம் செய்வதாக ஆசை வார்த்தை கூறி சிறுமியை பலமுறை பாலியல் வன்கொடுமை செய்ததில் சிறுமி கர்ப்பமானாள்.

இதைத்தொடர்ந்து சிறுமியின்பெற்றோர்அளித்த புகாரின் பேரில் காங்கயம் மகளிர் போலீசார் போக்சோ பிரிவின் கீழ் வழக்குப்பதிவு செய்து விஷ்ணுவை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இதுதொடர்பான வழக்கு விசாரணை திருப்பூர் மாவட்ட மகளிர் கோர்ட்டில் நடந்து வந்தது. இந்த வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது. போக்சோ குற்றத்துக்காக விஷ்ணுவுக்கு 20 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனை, ரூ.10 ஆயிரம் அபராதம் விதித்து நீதிபதி கோகிலா தீர்ப்பளித்தார்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

30.6.2025

# நடிகர்களை தவிர வேறு யாரும் போதைப்பொருள்களை பயன்படுத்தவில்லையா? சீமான் கேள்வி

சென்னை, ஜூன் 30

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர்சீமான் இன்று செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது;

நடிகர்கள் ஸ்ரீகாந்தும், கிருஷ்ணாவும் போதைப் பொருளை பயன்படுத்தினார்கள் என்கிறார்கள். இவர்கள் இருவரை தவிர வேறு யாரும் பயன்படுத்தவில்லையா? இந்தியா முழுவதும் இந்த போதைப்பொருள்கலாச்சசாரம் உள்ளது. மும்பையில் அதானியின் துறைமுகத்தில் ரூ.20 லட்சம் கோடிக்கு மேல் மதிப்புள்ள போதைப்பொருள் கப்பலில் வந்தது என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். அந்த கப்பலை திருப்பி அனுப்பினீர்களா? போதைப் பொருளை என்ன செய்தீர்? என்று நான் ஒருவன் தான் கேள்வி கேட்டேன்.

போதைப் பொருள் பயன்படுத்திய இருவரை கைது செய்தீர்கள். சரி விற்றவன் எங்கே? காட்டுக்குள் சந்தனக் கடத்தல் வீரப்பன், யானை தந்தம் கடத்தல், கடத்தல்காரர்கள் என்று கூறுவீர்கள். விற்றவன் காட்டுக்குள் இருந்தான். வாங்கினவன் எங்கு இருந்தான்? அவர்களில் எத்தனை பேரை கைது செய்தீர்கள்? கிருஷ்ணாவும், ஸ்ரீகாந்தும்தான் குற்றவாளிகளா? அப்பாவிகள்.

ஸ்ரீகாந்துக்கு போதைப் பொருள் விற்றவன் அதிமுக நிர்வாகி என்பதால் இதை திருப்புகிறீர்கள். அப்போ, திமுகவிற்கும், போதைப் பொருளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லையா? போதைப் பொருள் எப்படி புழங்குகிறது. அதன் வேரை வெட்டுங்கள். இளையும், கிளையையும் வெட்டுகிறீர்கள்."

இவ்வாறு அவர் பேசினார்.

# பூவை ஜெகன்மூர்த்தி முன் ஜாமீன் கோரி சுப்ரீம் கோர்ட்டில் மேல் முறையீடு

சென்னை, ஜூன் 30

திருவள்ளூர் மாவட்டம் களாம்பாக்கம் பகுதியைச் சேர்ந்த தனுஷ், தேனியைச் சேர்ந்த விஜயஸ்ரீ காதல் திருமண விவகாரத்தில் தனுஷின் சகோதரரை கடத்தியது தொடர்பாக புரட்சி பாரதம் கட்சி தலைவரும், கே.வி.குப்பம் தொகுதி எம்.எல்.ஏ.வுமான பூவைஜெகன்மூர்த்தியை போலீசார் தேடினர். இதைத்தொடர்ந்து அவர் முன்ஜாமீன் கோரி சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி வேல்முருகன், போலீஸ் விசாரணைக்கு ஆஜராகும்படி பூவை ஜெகன்மூர்த்திக்கு உத்தரவிட்டார். அதே வேளையில்கடத்தலுக்கு உடந்தையாக செயல்பட்டுள்ளதாக குற்றம்சாட்டப்பட்ட கூடுதல் டி.ஜி.பி. ஜெயராமை கைது செய்து விசாரித்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க உத்தரவு பிறப்பித்தார். அதன்படி, ஜெயராமிடம் விசாரணை நடத்திய போலீசார் விசாரணைக்கு பின்பு அவரை விடுவித்தனர். தனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து கூடுதல் டி.ஜி.பி. ஜெயராம் சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனுவை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு, பூவை ஜெகன்மூர்த்தியின் முன்ஜாமீன் மனு மீதான விசாரணையை வேறு நீதிபதிக்கு மாற்ற சென்னை ஐகோர்ட்டு தலைமை நீதிபதிக்கு உத்தரவிட்டார். அதன்படி பூவை ஜெகன்மூர்த்தியின் முன்ஜாமீன் மனு மீதான விசாரணையை நீதிபதி வேல்முருகனிடம் இருந்து நீதிபதி ஜெயச்சந்திரனுக்கு மாற்றி தலைமை நீதிபதி உத்தரவிட்டார்.

நேற்று அந்த முன்ஜாமீன் மனு நீதிபதி ஜெயச்சந்திரன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. தமிழக அரசு தரப்பில் விசாரணையை தள்ளி வைக்க கோரப்பட்டது. இதைத்தொடர்ந்து, விசாரணையை நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்றது. இதில் பூவை ஜெகன்மூர்த்தி தாக்கல் செய்த முன் ஜாமீன் மனுவை சென்னை ஐகோர்ட்டு தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. இந்த நிலையில் பூவை ஜெகன்மூர்த்தி முன் ஜாமீன் கோரி தற்போது சுப்ரீம் கோர்ட்டில் மேல் முறையீடு செய்துள்ளார்.

# திருப்பூர்: பள்ளியில் மரம் முறிந்து விழுந்து மாணவன் பலி

திருப்பூர் ஜூன் 30

திருப்பூர் மாவட்டம் காங்கேயம் பகுதியைச் சேர்ந்தவர் ராஜ்குமார். இவர் தனியார் ஆலையில் வேலை செய்து வருகிறார். இவரது மகன்அட்சயன்(15வயது). இவர் சிவன்மலை அருகே உள்ள தனியார் பள்ளியில் 11ம் வகுப்பு படித்து வந்தார்.

இந்த நிலையில் இன்று மதியம் 3.45 மணியளவில் மாணவன் அட்சயன் கழிவறைக்குச் சென்றுள்ளார். அப்போது அங்கிருந்த மரத்திலிருந்த கிளை ஒன்று முறிந்து மாணவன் மீது விழுந்துள்ளது. இதில் படுகாயமடைந்த மாணவனை, ஆசிரியர்கள் உடனடியாக மீட்டு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.

அங்கு மாணவனை பரிசோதித்த மருத்துவர்கள் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பாக காங்கேயம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# விளம்பரம் அச்சிட்ட பைக்கு ரூ.20 வசூல்; வாடிக்கையாளருக்கு நஷ்ட ஈடு வழங்க கோர்ட்டு உத்தரவு




நெல்லை, ஜூன் 30

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை பர்கிட் மாநகரத்தை சேர்ந்த பரமசிவம் என்ற வழக்கறிஞர், மாவட்ட நுகர்வோர் கோர்ட்டில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவில் சுவீட் கடை ஒன்றில் பொருட்கள் வாங்கியபோது அந்த கடையின் விளம்பரம் அச்சிட்ட பைக்கு தன்னிடம் ரூ.20 வசூல் செய்யப்பட்டதாகவும், சம்மந்தப்பட்ட கடை நிர்வாகம் தனக்கு நஷ்ட ஈடு வழங்க உத்தரவிட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி தாகூர் மற்றும் உறுப்பினர் கனகசபாபதி ஆகியோர், இதனை சேவை குறைபாடு என்று குறிப்பிட்டனர். இதையடுத்து பரமசிவத்திற்கு ஏற்பட்ட மனஉளைச்சலுக்கு ரூ.10,000, வழக்கிற்கான செலவு ரூ.5,000 மற்றும் விளம்பர பைக்கு ரூ.20 என மொத்தம் ரூ.15,020 வழங்க சம்பந்தப்பட்ட சுவீட் கடைக்கு நுகர்வோர் கோர்ட்டு உத்தரவிட்டது.

# இன்றைய ராசி பலன்கள் (30.6.2025)




தொழிலில் உயர்வு, முயற்சிகளில் வெற்றி கவனம்: கோபத்தை கட்டுப்படுத்தவும் பரிகாரம்: சூரியனை வழிபடவும்




பொருளாதார முன்னேற்றம், குடும்பத்தில் மகிழ்ச்சி கவனம்: வியர்வைச்சிதைவு நோய்கள் பரிகாரம்: துர்கை அம்மனை வழிபடவும்




புதிய சந்திப்புகள், தொடர்புகளில் வளர்ச்சி கவனம்: நேரத்தை திட்டமிட்டு பயன்படுத்தவும் பரிகாரம்: விஷ்ணு கோவிலுக்கு செல்லவும்




குடும்பச் சுமைகள் குறையும் கவனம்: பழைய வாக்குறுதிகளை நினைவில் கொள்க பரிகாரம்: சந்திரனுக்கு நைவேத்யம் செய்வது நல்லது




சுயமுனைவு செயல்களில் வெற்றி கவனம்: மற்றவர்களின் ஆலோசனையை கேட்டே முடிவெடுக்கவும் பரிகாரம்: ஸ்ரீ ராகவெந்திரர் தரிசனம் நல்லது




கல்வி மற்றும் அறிவுப் புலனில் மேன்மை கவனம்: உடல் சோர்வு ஏற்படலாம் பரிகாரம்: விநாயகரை வணங்கவும்




தொழிலில் புதுமை மற்றும் முயற்சிகள் பலிக்கலாம் கவனம்: நெருக்கமான உறவுகளில் சிறிது மோதல் ஏற்படலாம் பரிகாரம்: ஸ்ரீ மகாலட்சுமி பூஜை செய்யவும்




பழைய கடன்கள் தவிர்க்கும் சூழ்நிலை கவனம்: மனஅழுத்தம் வரலாம் பரிகாரம்: ஆஞ்சனேயரை வழிபடவும்




வெளிநாட்டு வாய்ப்புகள் தேடி வரும் கவனம்: ஆவலாகச் சொல்வதை தவிர்க்கவும் பரிகாரம்: குருவை வணங்கவும்




சிந்தனையில் தெளிவு, திட்டங்களில் வெற்றி கவனம்: உடல் சோர்வு, நேர உணவு பழக்கம் முக்கியம் பரிகாரம்: ஸ்நானம் செய்து பூஜை செய்வது நல்லது




நண்பர்களிடம் ஆதரவு கிடைக்கும் கவனம்: வாகன பயணங்களில் கவனம் பரிகாரம்: சனி பகவானை வழிபடவும்




தொழிலில் எதிர்பாராத முன்னேற்றம் கவனம்: சிறு செலவுகள் அதிகமாகலாம் பரிகாரம்: நரசிம்மர் வழிபாடு நல்லது.

# அரசுப் பள்ளியில் வழங்கப்பட்ட காலை உணவில் பல்லி: இத்தனை அலட்சியம் ஏன்? நயினார் நாகேந்திரன் கேள்வி

சென்னை ஜூன் 30

தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அருகேயுள்ள அரசுப் பள்ளியில் வழங்கப்பட்ட காலை உணவில் பல்லி கிடந்ததாகவும், அதை உட்கொண்ட நாற்பது மாணவர்களுள்நான்கு மாணவர்களுக்கு வாந்தி மயக்கம் ஏற்பட்டு அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும் வெளியாகியுள்ள செய்தி வேதனையளிக்கிறது.

தாராபுரம் மற்றும் அதன் சுற்றியுள்ள அரசு பள்ளிகளில் அரசு காலை உணவு திட்டத்தின் கீழ் இலவசமாக வழங்கப்படும் உணவுகள் அனைத்தும் சுமார் 37 கிலோமீட்டர் தொலைவில் உள்ள காங்கேயத்தில் இருந்து தயார் செய்து கொண்டு வருவதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன. பள்ளிகளில் உள்ள சத்துணவு கூடங்களிலேயே காலை உணவையும் தயாரிப்பதை விட்டுவிட்டு எதற்காக அத்தனை தூரத்திலிருந்து உணவு கொண்டு வரப்படுகிறது? சத்துணவு ஊழியர் பற்றாக்குறையின் காரணமாகவா? தொலைதூரத்தில் இருந்து கொண்டு வரப்படும் உணவு சுகாதாரமானதாகவும் சூடானதாகவும் இருக்குமா?

"சத்துணவில் புழு, பூச்சி நெளிகிறது" என சில தினங்களுக்கு முன்பு கள்ளக்குறிச்சி அரசுப் பள்ளி குழந்தைகள் வேதனையுடன் பகிர்ந்த நிலையில், மீண்டும் அதே போன்றதொரு சம்பவம் நடந்துள்ளது தி.மு.க. அரசின் நிர்வாகக் குளறுபடிகளையே குறிக்கிறது. ஏழைக் குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவில் இத்தனை அலட்சியம் ஏன்?

எனவே, தேசியக் கல்விக் கொள்கையில் உள்ள காலை உணவு திட்டத்தின் மீது தி.மு.க. ஸ்டிக்கர் ஒட்டினால் மட்டும் போதாது அதை முறையாகவும் செயல்படுத்த வேண்டுமென தமிழக முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலினை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# ஹரிஷ் கல்யாண் பிறந்த நாள்.. 'டீசல்' படக்குழு வெளியிட்ட சிறப்பு போஸ்டர்




'பார்க்கிங்', 'லப்பர் பந்து' என தனது அடுத்தடுத்த ஹிட் படங்கள் மூலம் தமிழ் சினிமாவின் தவிர்க்க முடியாத முன்னணி நடிகர்களில் ஒருவராக ஹரிஷ் கல்யாண் உள்ளார். இவர் சண்முகம் முத்துசாமி இயக்கத்தில் 'டீசல்' என்ற படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்தில் கதாநாயகியாக அதுல்யா ரவி நடிக்க வினய் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.

எஸ்.பி சினிமாஸ் என்டர்டெயின்மெண்ட் நிறுவனம் தயாரிக்கும் இந்த படத்துக்கு திபு நினன் தாமஸ் இசையமைக்கிறார். விறுவிறுப்பாக நடைபெற்று வரும் இந்த படத்தின் படப்பிடிப்பு தற்போது இறுதிக் கட்டத்தை நெருங்கியுள்ளது. இந்த படம் ஹரிஷ் கல்யாண் கரியரில் அதிக பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட படமாகும். இப்படத்தின் டீசர் விரைவில் திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

இந்த நிலையில், நடிகர் ஹரிஷ் கல்யாண் தன்னுடைய பிறந்த நாளை கொண்டாடி வருகிறார். இந்த நிலையில் அவரது பிறந்தநாளை ஒட்டி 'டீசல்' படக்குழு சிறப்பு போஸ்டரை வெளியிட்டு அவருக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளது.

# விஜய் சேதுபதியின் தலைவன் தலைவி பட ரிலீஸ் தேதி அறிவிப்பு



இயக்குநர் பாண்டிராஜ் இயக்கத்தில் நடிகர் விஜய் சேதுபதி நடிப்பில் புதிய படம் உருவாகி உள்ள படம் 'தலைவன் தலைவி'. இது விஜய் சேதுபதியின் 52வது படமாகும். சத்ய ஜோதி பிலிம்ஸ்தயாரித்துள்ளஇந்தபடத்தில்நித்யாமேனன்,யோகிபாபுமுக்கியகதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

குடும்பப் பின்னணியைக் கதையாக வைத்து உருவாகியுள்ள இந்த படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் நிறைவடைந்தது. விஜய் சேதுபதி பாண்டிராஜ் இருவரும் முதல் முறையாக இணைந்துள்ளதால் இந்த படத்துக்கு ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது. இந்த படத்தில் விஜய் சேதுபதி புரோட்டா மாஸ்டராக நடித்துள்ளதாக சொல்லப்படுகிறது. இப்படத்தின் டைட்டில் டீசர் சமீபத்தில் வெளியானது.

சமீபத்தில் இந்த படத்திலிருந்து 'பொட்டல முட்டாயே' பாடல் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது. இந்த நிலையில், 'தலைவன் தலைவி' படத்தின் ரிலீஸ் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இப்படம் ஜூலை 25ம் தேதி வெளியாக உள்ளது.

# சீஷெல்ஸ் நாட்டிற்கு சுற்றுலா சென்ற சூர்யா ஜோதிகா



சூர்யா ஜோதிகா 1999ம் ஆண்டு வெளியான 'பூவெல்லாம் கேட்டுப்பார்' திரைப்பத்தில் முதன் முதலாக இணைந்து நடித்தனர். அதை தொடர்ந்து இந்த ஜோடி உயிரிலே கலந்தது, பேரழகன், காக்க காக்க, சில்லுனு ஒரு காதல், மாயாவி உள்ளிட்ட திரைப்படங்களை ஒன்றாக இணைந்து நடித்தனர்.

இதனையடுத்து சூர்யா ஜோதிகா இருவரும் 2006ம் ஆண்டு இருவீட்டாரின் சம்மதத்தோடு திருமணம் செய்து கொண்டனர். நட்சத்திர காதல் தம்பதிகளான சூர்யா ஜோதிகா தற்போது மும்பையில் குடும்பத்துடன் வசித்து வருகின்றனர். சினிமாவைக் கடந்து தனிப்பட்ட வாழ்விலும் இந்த இணை பலருக்கும் முன்மாதிரியாக இருக்கின்றனர். குறிப்பாக, சூர்யா ரசிகர்களுக்கு..ரெட்ரோ வெற்றியைத் தொடர்ந்து சூர்யா, வெங்கட் அட்லூரி இயக்கத்தில் நடித்து வருகிறார். .இந்த நிலையில், படப்பிடிப்புக்குச் செல்வதற்கு முன் சூர்யா தன் மனைவி ஜோதிகாவுடன் கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள சீஷெல்ஸ் நாட்டிற்குச் சுற்றுலா சென்றுள்ளார். அங்கு இருவரும் மகிழ்ச்சியாக பயணம் செய்ததை, "நீயும் நானும் சொர்க்கத்தில்.." என ஜோதிகா வீடியோ வெளியிட்டு தெரிவித்துள்ளார். இந்த வீடியோவை பார்த்த ரசிகர்கள் மகிழ்ச்சியாக கமெண்ட் செய்து வருவதுடன் வாழ்ந்தால் இவர்களைப்போல் இணை பிரியாமல் வாழ வேண்டும் என தங்கள் விருப்பங்களையும் தெரிவித்து வருகின்றனர்.

# "கண்ணப்பா" பட வசூல் இத்தனை கோடியா?

தெலுங்கில் வரலாற்று புதினத்தை தழுவி உருவாகி இருக்கும் ஆன்மிக திரைப்படம் 'கண்ணப்பா'. மிகவும் பிரபலமான மகாபாரதம் தொடரை இயக்கிய பாலிவுட் இயக்குனர் முகேஷ் குமார் சிங் இத்திரைப்படத்தை இயக்கி இருக்கிறார். வரலாற்று பின்னணியில் கடவுள் சிவனை வழிபடும் அவரது தீவிர பக்தன் கண்ணப்பரை பற்றிய கதையை தழுவி இப்படம் உருவாகி இருக்கிறது.

இத்திரைப்படத்தில் பிரபல தெலுங்கு நடிகர் விஷ்ணு மஞ்சு கண்ணப்பர் வேடத்தில் நடித்துள்ளார். மேலும், மோகன்லால், பிரபாஸ், காஜல் அகர்வால், அக்சய் குமார், பிரீத்தி முகுந்தன், மோகன்பாபு உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருக்கின்றனர். இப்படம் உலகம் முழுவதும் கடந்த 27ம் தேதி திரையரங்குகளில் வெளியானது. தெலுங்கு, ஹிந்தி, தமிழ், மலையாளம் எனப் பல மொழிகளிலும் பான்இந்தியா திரைப்படமாக கண்ணப்பா உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், 'கண்ணப்பா' திரைப்படம் வெளியான 2 நாட்களில் ரூ. 16 கோடி வசூலித்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. எனினும், வசூல் குறித்த அதிகாரபூர்வ தகவல் படத் தயாரிப்பு நிறுவனத்திலிருந்து இன்னும் வெளியிடப்படவில்லை

# இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் எது நடந்தாலும் சுப்மன் கில்லை.. இந்திய முன்னாள் வீரர் ஆதரவு



சுப்மன் கில் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி லீட்சில் நடைபெற்றது. இந்த போட்டியில் இந்தியா நிர்ணயித்த 371 ரன்கள் இலக்கை இங்கிலாந்து அணி எட்டிப்பிடித்து அசத்தியது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2வது போட்டி ஜூலை 2ம் தேதி பர்மிங்காமில் நடைபெற உள்ளது.

இந்த தொடருக்கு முன்னதாக ரோகித் சர்மா ஓய்வு பெற்றதால் இந்திய டெஸ்ட் அணியின் புதிய கேப்டனாக சுப்மன் கில் நியமிக்கப்பட்டார். இதற்கு பல முன்னாள் வீரர்கள் அதிருப்தி தெரிவித்திருந்தனர்.

இருப்பினும்அதனைநினைத்துஎந்தகவலையும்கொள்ளாதசுப்மன்கில்கேப்டனானமுதல்போட்டியிலேயே சதமடித்து அசத்தினார். ஆனாலும் தனது கேப்டன்சி பயணத்தை தோல்வியுடன் தொடங்கியுள்ளார்.

இந்நிலையில் ஒருவேளை இங்கிலாந்து தொடரில் தோல்வியை சந்தித்தாலும் சுப்மன் கில்லை கேப்டன்ஷிப் பதவியிலிருந்து நீக்கக்கூடாது என இந்திய முன்னாள் வீரர் ரவி சாஸ்திரி ஆதரவு தெரிவித்துள்ளார். இங்கிருந்து அவருக்கு குறைந்தது 3 வருடங்கள் கேப்டனாக செயல்படும் வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும் என்றும் சாஸ்திரி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு: "சுப்மன் கில்லுக்கு வாய்ப்புகள் கிடைக்காமல் போனால் நான் ஏமாற்றமடைவேன். பேட்டிங் செய்யும்போது அவருக்கு ஒரு ராஜரீக குணம் இருக்கும். சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் தன்னை மாற்றியமைத்துக் கொள்ளும் முறையை கற்றுக்கொள்ள முடிந்தால் அவருடைய பெயரும் பெரிதாக வருவதைப் பார்க்க முடியும். தற்போது நிறைய முதிர்ச்சியைப் பெற்றுள்ள அவர் ஊடகங்களை சிறப்பாக கையாண்டு டாஸ் வீசும் போதும் நன்றாக பேசுகிறார்.


அவரை 3 வருடங்கள் கேப்டனாக இருக்க விடுங்கள். இந்தத் தொடரில் எது நடந்தாலும் தேவையின்றி மாற்றங்கள் செய்யாதீர்கள். அவருக்கு 3 வருடங்கள் வாய்ப்பு கொடுங்கள். அதைச் செய்தால் அவரால் தொடர் வெற்றிகளைப் பெற்றுக் கொடுக்க முடியும் என்று நம்புகிறேன்" என கூறினார்.

# மல்லோர்கா ஓபன் டென்னிஸ்: கிரீக்ஸ்பூர் சாம்பியன்

பல முன்னணி வீரர்கள் பங்கேற்றிருந்த மல்லோர்கா ஓபன் டென்னிஸ் தொடர் ஸ்பெயினில் நடைபெற்றது. இதன் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில் கிரீக்ஸ்பூர் (நெதர்லாந்து), கோரன்டின் மவுடெட் (பிரெஞ்சு) ஆகியோர் மோதினர்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த மோதலில் கிரீக்ஸ்பூர் 75 மற்றும் 76 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்று அசத்தினார்.

# டெஸ்ட் கிரிக்கெட்: ஆகாஷ் சோப்ரா தேர்வு செய்த ஆல் டைம் சிறந்த இந்திய அணி.. யாருக்கெல்லாம் இடம்..?



நூற்றாண்டை தாண்டி நடைபெற்று வரும் கிரிக்கெட் போட்டியில் சிறப்பாக விளையாடிய வீரர்களை கொண்டு சிறந்த அணியை பல முன்னாள் வீரர்களும், கிரிக்கெட் வல்லுநர்களும் தேர்வு செய்து அறிவிப்பது வழக்கம்.

அந்த வரிசையில் இந்திய முன்னாள் வீரரான ஆகாஷ் சோப்ரா டெஸ்ட் போட்டிகளில் அசத்திய இந்திய வீரர்களை கொண்டு ஆல்டைம் சிறந்த இந்திய அணியை தேர்வு செய்துள்ளார்.

ஆகாஷ் சோப்ரா தேர்வு செய்த அணியில் சச்சின், ராகுல் டிராவிட், சேவாக், கவாஸ்கர் போன்ற முன்னணி வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். ஆனால் அந்த அணியில் முன்னாள் கேப்டன்களான மகேந்திரசிங் தோனி மற்றும்ரோகித்சர்மாவைஅவர்தேர்வுசெய்யவில்லை.

ஆகாஷ் சோப்ரா தேர்வு செய்த அணி விவரம் பின்வருமாறு:

1. சுனில் கவாஸ்கர் 2. வீரேந்திர சேவாக் 3.ராகுல் டிராவிட் 4. சச்சின் தெண்டுல்கர் 5. விராட் கோலி 6. ரிஷப் பண்ட் 7. கபில் தேவ் 8. ரவிச்சந்திரன் அஸ்வின் 9. அனில் கும்ப்ளே 10. ஜஸ்பிரித் பும்ரா 11. ஜாகீர் கான்

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.